முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தங்கியுள்ள அறையில் ரெய்டா?

அடக்குமுறைகளால் மிரட்ட முடியாது - அச்சுறுத்த முடியாது!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம்!

சென்னை, ஜூலை 31-

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, காவல்நிலையத்தில் கையெழுத்திட முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி தங்கியிருந்த ஹோட்டல் அறைக்குள்ளேயே சென்று ரெய்டு செய்வதா? அடக்குமுறைகளால் கழக முன்னாள் அமைச்சர்களை மிரட்ட முடியாது; கழகத்தை கடுகளவும் கூட அச்சுறுத்த முடியாது! என கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :

மாண்பமை உயர்நீதி மன்றத்தின் உத்தரவுப்படி காவல் நிலையத்திற்கு கையெழுத்திடச் செல்லவிருந்த முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்களை, அவரது அறைக்குள்ளேயே தடுத்து நிறுத்தி, லஞ்ச ஒழிப்புத்துறை மூலம் சோதனை நடத்தி, புதிதாகக் கிடைத்த அதிகார வெறியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் முதலமைச்சர் விஜய் அவர்களுக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேகதாது அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடகாவைத் தட்டிக் கேட்க முடியவில்லை. அனைத்துக் கட்சியினரையும் அழைத்துச் சென்று பிரதமரைச் சந்திக்கத் துப்பில்லை. மின் கட்டணக் குளறுபடிகளைச் சரி செய்ய முடியவில்லை. காவிரியில் இருந்து தமிழ் நாட்டிற்கு வேண்டிய தண்ணீரையும் பெற இயலவில்லை. பயிர்கடன் தள்ளுபடி கோரி போராடும் விவசாயிகளுக்குப் பதில் சொல்லவும் முடியவில்லை. ஆளுநர் பங்கேற்ற பட்டமளிப்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டதை கேள்விகேட்க துளி கூட திராணியற்று "டைவர்ஷன் பாலிடிக்ஸ்" மட்டுமே தங்களுக்குத் தெரிந்த ஒரே நிர்வாகம் எனச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு.

முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்களது அறையில் நடைபெற்ற சோதனையின் முடிவில் "எந்த ஆவணங்களும் எடுக்கவில்லை" என்று எழுதிக் கொடுத்துவிட்டுப் போகிறது லஞ்ச ஒழிப்புத் துறை என்றால், அவசர அவசரமாக "நள்ளிரவில்" இந்த ரெய்டு திட்டமிடப்பட்டதா? யார் விருப்பத்தை நிறைவேற்ற இப்படி ரெய்டு நடத்தப்பட்டது? கரூர் செல்வதற்கு முன்பு கைது செய்ய முடியவில்லையே என்ற ஆத்திரத்தில், ஏற்கெனவே டாஸ்மாக் தொடர்பான அமலாக்கத்துறையின் வழக்கு உச்சநீதி மன்றத்தால் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், லஞ்ச ஒழிப்புத்துறை மூலம் டாஸ்மாக்கை வைத்தே இந்த பழிவாங்கல் நடவடிக்கை ஏன்? டாஸ்மாக்கை தனியாருக்கு விடும் செய்தியை திசை திருப்ப இந்த ரெய்டா?

"மடியில் கனமில்லை. வழியில் பயமில்லை" என்று முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்கள் ரெய்டு முடிந்ததும் பேட்டி கொடுத்திருக்கிறார். அவரை மட்டுமல்ல, கழகத்தின் முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, கே.என்.நேரு, எஸ்.எஸ். சிவசங்கர் எனத் தேடித் தேடி பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடும் இந்த அரசு, தனது நிர்வாகத் தோல்விகளை மறைக்கவே இப்படி அடாவடி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது.

இதனைப் பார்க்கும் போது, "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்ற பழ மொழிதான் நினைவுக்கு வருகிறது.

அடக்குமுறைகளால் கழக முன்னாள் அமைச்சர்களை மிரட்டவும் முடியாது. கழகத்தினைக் கடுகளவு கூட அச்சுறுத்த முடியாது என்பதை நேற்றுப் பெய்த மழையில் முளைத்த காளான்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

கழகத்தை மிரட்ட நினைத்தவர்கள் அரசியல் களத்திலிருந்தே காணாமல் போனதுதான் கடந்தகால வரலாறு!

"அரசியல் பழிவாங்கல்" ஒரு வழிப்பாதை அல்ல! இதை "Diverson" பாலிடிக்ஸ் செய்ய விரும்பும் தவெக அரசும், அதன் முதல மைச்சர் விஜய் அவர்களும் புரிந்து கொள்வது நல்லது!

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார்.

151 உயர் சிறப்பு மருத்துவப் படிப்பு இடங்களை தாரை வார்த்த த.வெ.க. அரசு!

தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!

நாடு முழுவதும் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27% இடஒதுக்கீட்டைத் பெற்றுத் தந்தது தி.மு.கழகம் - ஆனால் இன்றைக்கு ஆட்சியில் உள்ள த.வெ.க அரசோ, உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும்போது தமிழ்நாடு அரசின் சார்பில் வழக்கறிஞர்களை கூட அனுப்பாமல் 151 உயர்சிறப்பு மருத்துவ படிப்பு இடங்களை அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு தாரை வார்த்துள்ளது!

திருச்சி மாவட்டத்தில் நிலுவையில் உள்ள

3 ரயில்வே மேம்பாலப் பணிகளை விரைந்து முடித்திடுவீர்!

ஒன்றிய அமைச்சரிடம் அருண் நேரு எம்.பி. மனு!

புதுடெல்லி, ஜூலை 31 -

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள முக்கிய ரயில்வே மேம்பால திட்டங்களை உடனடியாக முடித்து தர வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு ஒன்றிய ரயில்வே, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களை அவரது டெல்லி அலுவலகத்தில் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்.

இந்த சந்திப்பின் போது திருச்சி மாவட்ட மக்களின் நீண்ட நாள் பிரச்சினையை எடுத்துரைத்த எம்.பி. அருண் நேரு, மாநில அரசு பணிகள் முடிந்து பல மாதங்கள் ஆகியும் ரயில்வே துறையின் பகுதி பணிகள் மட்டும் நிறைவடையாததால் 3 முக்கிய மேம்பால திட்டங்கள் முடங்கி கிடப்பதாக தெரிவித்தார்.

கோரிக்கை மனுவில் வலியுறுத்தப்பட்ட முக்கிய திட்டங்கள்:

1. திருச்சி கோட்டை ரயில் நிலைய சாலை (மாரிஸ்) மேம்பாலம்

நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்த பாலத்தின் பணி 12 மாதங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ளது. தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்வதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

2. திருச்சி சந்திப்பு ரயில் நிலைய சாலை மேம்பாலம்

திருச்சி சந்திப்பு பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தீர்கும் இந்த திட்டம் 6 மாதங்களாக தாமதமாகி வருகிறது.

3. லால்குடி தாலுகா மணக்கால் கிராம சாலை மேம்பாலம்

கிராமப்புற மக்களின் பாதுகாப்பான பயணத்திற்கும், விவசாய பொருட்கள் விற்பனைக்கும் மிக முக்கியமான இந்த பாலத்தின் பணியும் 12 மாதங்களாக நிறைவடையவில்லை.

இந்த 3 மேம்பாலங்களும் விரைவில் முடிக்கப்பட்டால் திருச்சி மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் குறையும், சாலை விபத்துகள் தவிர்க்கப்படும், பொதுமக்களின் பயண நேரமும் மிச்சமாகும் என அருண் நேரு எம்.பி. தனது கோரிக்கை மனுவில் வலியுறுத்தினார்.

அவரது கோரிக்கையை பொறுமையாக கேட்ட மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், தெற்கு ரயில்வே பொது மேலாளருக்கு உடனடியாக உத்தரவிட்டு இந்த மூன்று திட்டங்களின் ரயில்வே பகுதி பணிகளை முன்னுரிமை அடிப்படையில் விரைந்து முடித்து தர நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.